வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.3918/ஆ.2/2024 நாள்: 04.12.2024

பொருள்: பள்ளிக் கல்வி-வேலூர் மாவட்டம்-2024-2025ஆம் கல்வியாண்டு-போஸ்ட் மெட்ரிக் (Post Matric) கல்வி உதவித் தொகை- அரசு/அரசு உதவி பெறும்/சுயநிதி/மெட்ரிக் பள்ளி தலைமையாசிரியர்கள்/ தாளாளர்கள்-தயார் நிலையில் வைக்க வேண்டிய முக்கிய பொருண்மைகள் பற்றி சுற்றறிக்கை அனுப்புதல்-சார்பு.

பார்வை: வேலூர் மாவட்ட ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் நல அலுவலரின் கடித ந.க.எண்.கே6/1131/2024 நாள்:04.11.2024

---------

வேலூர் மாவட்டம், 2024-2025 ஆம் (நடப்பு) கல்வியாண்டில் போஸ்ட் மெட்ரிக் (Post Matric) கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்திற்காக அரசு/அரசு உதவி பெறும்/சுயநிதி/மெட்ரிக் பள்ளிகள் தயார் நிலையில் வைக்க வேண்டிய முக்கிய பொருண்மைகள் கீழ்கண்டவாறு.

1. மாணாக்கரின் பெயர். பாலினம், பிறந்த தேதி ஆகியவை கல்வி சான்றிதழில் (10ஆம் வகுப்பு) உள்ளவாறு ஆதாரில் இடம்பெற்றுள்ளதை உறுதி செய்ய வேண்டும். அவ்வாறு இல்லையெனில், பள்ளி சான்றிதழ்களில் இடம்பெற்றுள்ளவாறு மாணாக்கரின் பெயர் ஆதாரில் மாற்றம் செய்யப்படவேண்டும்.

2. புதிய/புதுப்பித்தல் மாணாக்கர்கள் கட்டாயம் இணையவழி மூலம் (Online) வருமான சான்றிதழ் மற்றும் சாதி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

3. மாணாக்கர்களின் பெயரில் வங்கி கணக்கு எண் இருத்தல் வேண்டும் அவ்வாறு இருக்கும் பட்சத்தில், அவ்வங்கி கணக்கு எண் செயல்பாட்டில் உள்ளதை உறுதி செய்ய வேண்டும்.

4. மாணாக்கரின் வங்கி கணக்கில் இடம் பெற்றுள்ள பெயர், அம்மாணாக்கரின் பள்ளி சான்றிதழ்களில் உள்ளவாறு இடம்பெற்றுள்ளனவா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

5. மாணாக்கரின் வங்கி கணக்குடன் ஆதார் எண் இணைக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும். அவ்வாறு இணைக்கபடவில்லை எனில் வங்கிக் கணக்குடன் ஆதார் எண்ணை இணைப்பதற்கான படிவத்தினை மாணவர்களுக்கு வழங்க வேண்டும்.

6. மாணாக்கரின் வங்கி கணக்கிற்கு நேரடி பலன் பரிமாற்றத்தைப் (DBT பெறுவதற்கு மாணாக்கரின் ஆதார் எண் NPCI (ஆதார் சீடிங்) உடன் இணைக்கப்பட்டுள்ளதா என்பதை http://resident.uidai.gov.in/bank.mapper என்ற இணைய முகவரி மூலம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
7. மாணாக்கரின் ஆதார் NPCI உடன் இணைக்கபடவில்லை எனில் சம்மந்தப்பட்ட வங்கி மேலரை தொடர்பு கொள்ள அறிவுறுத்துமாறு தெரிவிக்கப்படுகிறது.
8. மாணாக்கரின் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ள முந்தைய வங்கி கணக்கு எண்னை மாற்றம் செய்யப்பட வேண்டும் எனில், மாணாக்கரின் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட வேண்டிய புதிய வங்கி கணக்கு விவரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.
9. மாணவரின் ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட கைபேசி எண் கட்டாயம் பயன்பாட்டில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
10. கல்வி உதவித்தொகை விண்ணப்பிக்கும் மாணவர்களின் பெற்றோர்/பாதுகாவலர் மத்திய/மாநில அரசின் கீழ் பணிபுரிந்தால், அவர்கள் பணிபுரியும் அலுவலரிடமிருந்து ஊதியம் பெறும் சான்றும் (Pay Slip), மேலும் வருவாய் துறையிடமிருந்து வருமான சான்றும் (Income From all souce–HRA நீங்கலாக ) கட்டாயம் கல்வி நிறுவனத்திடம் சமர்ப்பிக்க வேண்டும்.

எனவே, நடப்பு கல்வியாண்டில் (2024–2025) போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை பெறவுள்ள மாணாக்கர்களுக்கு மேற்காண் பொருண்மைகளை தெரிய படுத்தி, உரிய நேரத்தில் கல்வி உதவித் தொகை பெற வங்கிக் கணக்குகளை தயார் நிலையில் வைத்திட அறிவுறுத்துமாறு அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள்/ தாளாளர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

தலைமையாசிரியர்கள்/ தாளாளர்கள்
அனைத்து வகை மேல்நிலைப் பள்ளிகள்
வேலூர்.

நகல்

மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்
வேலூர்.